செ.வெ.எண்.26 நாள்.10.10.2017.

**திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை வெள்ளத்தடுப்பு, மீட்பு மற்றும் பேரிடர் மேலாண்மை தொடர்பான முன்னோற்பாடு கூட்டம் – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

––––––––

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை வெள்ளத்தடுப்பு, மீட்பு மற்றும் பேரிடர் மேலாண்மை தொடர்பான முன்னோற்பாடு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (10.10.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

வடகிழக்கு பருவமழை அக்டோபர் 15ல் தொடங்கப்படவுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், மழை, வெள்ளம் காலங்களில் பேரிடர் மேலாண்மை செய்வது தொடர்பாக பல்வேறு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்ய வேண்டும். மாவட்ட அளவில் பேரிடர் மேலாண்மை தகவல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் பட்டியலிடப்பட்டுப்பட்டுள்ளது. இதுபோலவே, ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகங்களிலும், பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்பு தகவல் மையங்களை அமைக்க வேண்டும். ஒவ்வொரு வட்டத்திலும் வெள்ள பாதிப்பு ஏற்படும் பகுதிகளை கண்டறிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவையான ஆலோசனைகளை செய்ய வேண்டும். காவல் துறை, தீயணைப்புத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், பொதுப்பணித் துறை உள்ளிட்ட துறைகளுடன் ஆலோசனைகள் மேற்கொள்ள வேண்டும். நல்ல ஆரோக்கியமான நிலையில் உள்ளவர்களை மீட்பது எளிது. சிறிய குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், முதியவர்களை மீட்பது குறித்து சிறப்பு பயிற்சிகள் மற்றும் முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களில் தங்க வைத்து, அவர்களுக்கு தேவையான மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அடிப்படை வசதிகள் இல்லையெனில் உடன் நடவடிக்கை மேற்கொண்டு அடிப்படை வசதிகளை செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். இதுபோன்ற மீட்பு பணிகளில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். ஓவ்வொரு தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கும் ஒரு சிறப்பு பணிகள் இருக்கும். அவைகளை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முக்கியமாக, பேரிடர் காலங்களில் மீட்பு பணிகளை மேற்கொள்வது அவர்களை தங்க வைப்பது, அவர்களுக்கு மறுவாழ்வு பணிகளை செய்தல் குறித்து முன்னதாகவே ஆலோசித்துக் முன்னேற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும். மாவட்ட வழங்கல் துறையின் மூலம் பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு குடிமைப் பொருட்கள் சீராக வழங்கிட தேவையான இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர் சீராக வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரசு மற்றும் தனியார் ஆம்புலன்ஸ் தொடர்பு எண்களை பெற்று, தயார் நிலையில் வைக்க வேண்டும். நெடுஞ்சாலைத் துறையினர் சாலைகளில் பாதிப்புகள் ஏற்பட்டால் சரி செய்திட தேவையான ஜேசிபி இயந்திரம் உள்ளிட்டவைகளை தயார் நிலையில் வைத்திட வேண்டும். பல்வேறு பகுதிகளிலுள்ள இயந்திரங்களின் தொடர்பு எண், முகவரிகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மின்சார வாரியத்தினர் பேரிடர் காலங்களில் தேவையான மின் கம்பங்கள் மற்றும் பொருட்கள் தயார் நிலையில் உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து வடகிழக்கு பருவமழை காலங்களில் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமின்றி மீட்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.இராமசுப்பிரமணியன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து வட்டாட்சியர்கள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.